## 2

# திங்கட்கிழமை

## மத்தேயு 21:12-17; மாற்கு 11:12-19; லூக்கா 19:45-48; யோவான் 12:20-50

*"இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, ... அப்பொழுது, குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (மத்தேயு 21:12-14).*

இயேசு இப்பொழுது எருசலேமுக்கு வந்து சேர்ந்திருந்தார். அவர் ஒருக்காலும் பத்திரிக்கையின் மேல் அட்டையில் "இந்த ஆண்டின் மனிதராக" இருக்கமாட்டார் அல்லது நோபெல் பரிசைப் பெறமாட்டார், ஆனால் அவர் நமது இரட்சகரானார்! அவர் (சமாதானத்தின் சின்னமான) கழுதையின்மீது பவனி சென்றார்; அவர் (யுத்தத்தின் சின்னமான) குதிரையின்மீது பவனி செல்லவில்லை. சாலொமோன் அரசருக்குப் பின்பு, எந்த ஒரு அரசரும் கழுதையின்மீது பவனி சென்றிருக்கவில்லை (1 இராஜாக்கள் 1:38ஐக் காணவும்).

அதிகாரத்துவம்தான், எப்பொழுதுமே, பிரச்சனைக்குரிய விஷயமாக இருந்தது. திங்கட்கிழமையான இந்த நாளில், இயேசு தமது மத ஆதாரச் சான்றுகளை முன்வைப்பார்.

### இயேசு அத்திமரம் ஒன்றை சபித்தார்

இயேசு பசியாயிருந்தார். அவர் இலைகள் நிறைந்திருந்த அத்திமரம் ஒன்றைக்கண்டு அதில் கனிகளின்றிக் காணப்பட்டதால் ஏமாற்றம் அடைந்தார். அவர் அந்த மரத்தை என்றென்றைக்குமாக ஆக்கினைத்தீர்ப்புக்கு உள்ளாக்கினார் (மத்தேயு 21:18-22; மாற்கு 11:12-14, 20-26ஐக் காணவும்). இது நம்மில் பெரும்பான்மையானவர்கள் நமது மனங்களில் உருவாக்கி வைத்துள்ள இயேசு அல்ல. இந்த வேளையில் அவரது நடவடிக்கையானது, அவரது ஊழியக்காலத்தில் அவர் நிகழ்த்திய எதிர்மறையான (அழிவுக்குரிய) இரண்டே இரண்டு அற்புதங்களில் ஒன்றாக உள்ளது (மத்தேயு 8:28-34ஐக் காணவும்). இது மனிதகுலத்தையல்ல, ஆனால் இயற்கையையே துன்புறுத்திற்று. அவர் அப்போஸ்தலர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்த புறப்பொருளான பாடம் ஒன்றைத் தந்தார். மேட்டிமையும் மாய்மாலமும்

*பாவமாக இருந்தது. அத்திமரம் கனிகளை உடையதாக உரிமைகோரிற்று. ஆனால் அது கனிகளைக் கொண்டிருக்கவில்லை. யூதத்துவ நடத்துநர்கள் தேவனுடையவர்களாகத் தங்களை உரிமைகோரிக்கொண்டிருந்தனர். ஆனால் (உண்மையில்) அவர்கள் அப்படியிருக்கவில்லை. யூதர்கள் தேவனால் அழைக்கப்படுவதற்காகத் தங்களைத் தாழ்த்தியிருக்க வேண்டும். அதற்குப்பதிலாக, அவர்கள் தாங்கள் மேன்மைமிக்கவர்களாக வெற்றி கொள்ளப்பட இயலாதவர்களாக இருந்ததாக நினைத்தனர்.*

*அந்த அத்திமரம் திடீரென்று பட்டுப்போனது பற்றிப் பேதுரு திகைப் படைந்தார். ஏன்? அப்போஸ்தலர்கள் இயேசு தண்ணீர்மீது நடந்ததை, வியாதியஸ்தர்களை குணமாக்கியதை, மரித்தோரை உயிருடன் எழுப்பி யதைக் கண்டிருந்தார்கள். இருப்பினும், இயேசுவின் கட்டளையின்பேரில் அத்திமரம் காய்ந்து போனதுகண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்!*

## இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தார்

*அடுத்ததாக, இயேசு தேவாலயத்திற்குச் சென்றார். அறிமுகம் எதுவுமின்றி, அவர் போதிக்கத் தொடங்கினார். அத்துடன், அவர் பார்வையற்றவர்களையும் ஊனமுற்றவர்களையும் குணமாக்கினார் (மத்தேயு 21:12-16; மாற்கு 11:15-18; லூக்கா 19:45-48ஐக் காணவும்). அவர் செய்த அற்புதமான விஷயங்களைப் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் கண்டனர் (மத்தேயு 21:15) மற்றும் அவர்கள் அவரது தெய்வீகத்துவம் பற்றி நிச்சயமாக அறிந்திருப்பார்கள்.*

*தேவாலயப்பகுதி பயபக்தி செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது, ஆனால் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது! அதை மக்கள் எருச லேமுக்குள் செல்வதற்கான குறுக்குவழியாகப் பயன்படுத்திக் கொண் டிருந்தனர்; அவர்கள் அவ்விடத்தை பேராசை மற்றும் பொருளாசையைச் செயல்படுத்தும் இடமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.*

*யூதர்கள் எபிரெய சேக்கல் நாணயத்தில் தேவாலய வரியைச் செலுத்த வேண்டி இருந்தது. எருசலேமுக்கு வந்தவர்கள் வரிசெலுத்துவதற்காக தாங்கள் வைத்திருந்த ரோம தினேரி அல்லது கிரேக்க திராக்மாக்களை தேவாலயத்து சேக்கல்களாக மாற்ற வேண்டியிருந்தது. ஆராதிப்பவர்களின் பணத்தை மாற்றிக்கொள்ளக் காசுக்கடைக்காரர்கள் ஏராளமான தொகையை வசூல் செய்தனர்.*

*இயேசு தேவாலயத்தைச் சுத்திகரிக்கையில், அவர் மக்களைத் தாக்க வில்லை, ஆனால் அவர்களை விரட்டினார். அங்கிருந்த பணிமுட்டுகளை அவர் ஒழுங்குபடுத்தினார். அவர் வேதாகமத்திலிருந்து மேற்கோள் காண் பித்தார்: " 'என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக் கிறது'; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மத்தேயு 21:13; எரேமியா 7:11ஐக் காணவும்). அவர் ஒரு கோழையாகவோ அல்லது "விளையாட்டுப் பிள்ளை"யாகவோ இருக்கவில்லை. அவர் "மனிதர்களின் மத்தியில் மனிதராக"/"ஆண்களின் மத்தியில் ஆணாக" இருந்தார். அவர் சரீரபலம் கொண்டவராக இருந்ததுமன்றி, வேத வாக்கியங்களையும்*

பலத்துடன் பயன்படுத்தினார். அவரது மொழி நடையானது கூர்மையாக, உண்மையாக இருந்தது.

## இயேசு தமது போதனையைத் தொடர்ந்தார்

இவை எல்லாவற்றின் மத்தியில், இயேசுவைக் காண விரும்பிய கிரேக்கர்கள் சிலர் அங்கு வந்தனர் (யோவான் 12:20-50).[1] யூதர்கள் அவரைக் கொலைசெய்யத் தேடுகையில், கிரேக்கர்கள் அவரது உரையைக் கேட்பதை நாடினர்! பிலிப்பு எப்போதுமே யாரையாவது இயேசுவினிடத்தில் அழைத்து வருபவராயிருந்தார். அவர் அந்திரேயாவுடன் சேர்ந்து கொண்டார், அவர்கள் இயேசுவை அணுகினர். இயேசு "தம்முடைய வேளை" வந்திருந்ததை அறிந்தார், இருப்பினும் அவர் ஆழமான சத்தியங்களைத் தொடர்ந்து போதித்தார். அவர், விதையானது பிழைக்க வேண்டுமென்றால், அது மண்ணில் விழுந்து மடிய வேண்டும் என்றும், தங்கள் ஜீவனை விரும்புகிறவர்கள் அதை இழந்துபோவார்கள் என்றும் போதித்தார் (யோவான் 12:21-26).

பின்பு இயேசு அங்கு கூடியிருந்த மற்றவர்களின் முன்னிலையில், "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றார். அப்போது அவரது வாழ்வில் மூன்றாவது முறையாக, வானத்திலிருந்து குரல் ஒன்று பேசிற்று (யோவான் 12:28). சிலருக்கு அது இடி முழக்கம் போன்று ஒலித்தது, ஆனால் இயேசுவுக்கு அது வெற்றியின் வாக்குத்தத்தமாக இருந்தது. அவரது மரணத்தின் மூலமாகச் சாத்தான் புறம்பே தள்ளப்பட வேண்டியவனாக இருந்தான். இந்த வேளையில் இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று அறிவித்தார் (யோவான் 12:32).

பலத்த அற்புதத்துடன் இணைந்த இந்த மகிமையான போதனைக்குப் பின்பும்கூட மதத்தலைவர்கள் விசுவாசிக்க மறுத்தனர். யோவான், "... அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" என்று முடித்தார் (யோவான் 12:42, 43).

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]இந்த உரையாடல் திங்கட்கிழமையா அல்லது செவ்வாய்க்கிழமையா என்று தரப்பட்டது என்பதுபற்றி விளக்கவுரையாளர்கள் கருத்து ஒருமைப்படுவதில்லை. இது, யோவான் சுவிசேஷத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்த வெற்றிப் பிரவேசத்திற்கும், வெள்ளிக்கிழமையன்று நடந்த கடைசி இராப்போஜனத்திற்கும் இடையிலான ஒரே நிகழ்ச்சியாகக் காணப்படுகிறது.